# டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்பரம்

## கல்லூரி வரலாறு

தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் 19.06.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விழுப்புரத்தில் 2017–2018 ஆம் கல்வியாண்டு முதல் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவதற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டு புதியதாகத் துவங்கப்பட்ட இக்கல்லூரிக்கு கட்டிடம் கட்டுவதற்கு ரூ.7,97,50,000/– (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐப்பதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களால் 2017–18 ஆம் கல்வியாண்டில் 1. B.A தமிழ் 2. B.A ஆங்கிலம் 3. B.Com 4. B.Sc கணிதம் 5. B.Sc கணினி அறிவியல் ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளைக் கொண்டு மாணவிகள் சேர்க்கை நடைபெற்று, விழுப்புரம் காமராஜர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 292 மாணவிகளைக் கொண்டு செயல்பட்டு வந்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் 09.08.2017 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் இக்கல்லூரிக்கு டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2018–19 ஆம் கல்வியாண்டில் மேலும் புதியதாக 1. B.Sc வேதியியல் 2. B.Sc இயற்பியல் 3. B.Sc புள்ளியியல் மற்றும் 4. B.S.W (சமூகப்பணி) ஆகிய நான்கு பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டது.

2019–20 ஆம் கல்வியாண்டில் கூடுதலாக இரண்டு பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டது. (1. B.A வரலாறு 2. B.A பொருளியல்) தற்போது முதலாம் ஆண்டில் 638 மாணவிகளும், இரண்டாம் ஆண்டில் 471 மாணவிகளும் மற்றும் மூன்றாம் ஆண்டில் 292 மாணவிகளும் பயின்று வருகிறார்கள்.

இக்கல்லூரியில் 28 ஆசிரியப் பணியாளர்களும், 9 ஆசிரியரல்லாப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்தக் கல்வியாண்டில் (2019–20) இக்கல்லூரிக்குக் கூடுதலாக 12 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது மொத்தம் 1401 மாணவிகளைக் கொண்டு இக்கல்லூரி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.